www.padippakam.com

# தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்

தமிழீழ மக்களின் விடுதலையை வென்றெடுப்போம் !

படிப்பகம்

www.padippakam.com

எங்கள் மக்களே எம்மைப் புரட்சியாளர்களாக ஆக்கி யுள்ளார்கள். தமிழீழ மக்களது முழுமையான விடுதலையே எங்கள் தலையாய நோக்கமாகும். பரந்துபட்ட தமிழீழ மக்களின் ஆயுதம் ஏந்திய புரட்சிகரப் போராட்டத்தின் மூலமே தமிழீழ விடுதலையை அடைய முடியும். ஒன்று திரண்ட மக்கள் ஆதரவுடன் விரைவில் தமிழீழத்தை வென்றெடுப்போம்.

உமாமகேசுவரன் (முகுந்தன்)
செயலதிபர்
**தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்**

படிப்பகம்

www.padippakam.com

# தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்

நாங்கள் பிறவிப் புரட்சியாளரோ பிறவி அரசியல் வாதிகளோ அல்லர். எங்கள் மக்களே எம்மைப் புரட்சி யாளர்களாக ஆக்கியுள்ளார்கள். ஆகவே, எங்கள் இயக் கம் எம் நாட்டுச் சூழ்நிலைகளின் தேவையை ஒட்டி எழுந்த இயக்கமாகும்; இவ்வியக்கம் கோட்பாடுகளாலோ புத்தகப் படிப்பினாலோ எழுந்த அமைப்பன்று. கடந்த 15 ஆண்டுகாலப் போராட்டத்தினாலும் செயலாற்றலி னாலும் எழுந்த கோட்பாடுகளையே நாம் கைக்கொள் கிறோம்.

1970-ல் தோன்றிய தமிழ் மாணவர் பேரவை தமிழ் ஈழத்து மக்களின் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயமாக அமைந்தது. அதைத் தொடர்ந்து பல்வேறு வடிவத்தில் மக்களால் நடாத்தப்பட்ட போராட்டங்களிலிருந்தே தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் தோன்றியது. இவ்வியக்கமே எம் நாட்டின் ஒடுக்கப்பட்ட மக்களது தீர்க்கமான முன்னோடியாகும்.

## குறிக்கோளும் நோக்கங்களும்

தமிழ் ஈழ மக்களது முழு விடுதலையே எங்கள் தலையாய நோக்கமாகும். தமிழர் பிரதேசம் நீண்டகால மாகப் பொருளாதாரம், கலாசாரம், இராணுவம், கருத் துருவம் ஆகியவற்றில் ஒடுக்கப்பட்டிருந்தது. 1948-ல் பத்து இலட்சத்திற்கு மேற்பட்ட மலையகத் தமிழரின் குடி யுரிமை பறிக்கப்பட்டது. 30 ஆண்டுக் காலமாகத் தமிழர் வாழ்ந்த பகுதிகளைப் பூகோள ரீதியில் அழிக்கும் நோக்க



படிப்பகம்

www.padippakam.com
மாக அரசு குடியேற்றத் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. 1956-ல் நிறைவேற்றப்பட்ட 'சிங்களம் மட்டும் சட்டம்' தமிழர்கள் பொருளாதார ரீதியில் வளர்வதைத் தடுக்கவே கொண்டுவரப்பட்டது. விவசாயம் இயந்திர உற்பத்தித் தொழில்களில் பாகுபாடு காட்டப்பட்டது. கலாசார வெளிப்பாடுகள் தடுக்கப்பட்டன. 1956, 1958, 1977, 1979, 1981, 1983 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற அழிவு முயற்சிகள் தமிழ்த் தேசிய இன ஒடுக்குமுறையின் சில முகங்களாகும். இச் சூழ்நிலையில் புதிய அரசு ஒன்றை அமைக்கப் போராடுவது தவிர எமக்கு வேறு வழி கிடையாது—அதுவே 'தமிழீழ மக்கள் சனநாயகக் குடியரசு' ஆகும்.

எங்கள் பிரதான நோக்கம் தமிழ் பேசும் ஈழ மக்களது விடுதலை என்று கூறும்போது சுதந்திரக் கொடியைப் பறக்கவிடுவது மட்டுமே என்பதன்று. விடுதலை என்பது வெறும் அரசியல் விடுதலை என்பது மட்டுமன்று. எங்கள் மக்கள் பொருளாதார, சமூக, கலாசார, கருத்துருவ ஆதிக்கங்களிலிருந்து பெறும் விடுதலையுமாகும். இவ் விடுதலை சிறீலங்கா அரசின் ஒடுக்குமுறையிலிருந்து விடுதலை பெறுவது மட்டுமன்று; தமிழ் முதலாளிகளின் பிடியிலிருந்து பெறும் விடுதலையுமாகும்.

## முன்னேற்றப் பாதை

நாம் ஒரு நீண்டகால மக்கள் யுத்தத்தை ஆரம்பிக்க உள்ளோம். பரந்துபட்ட மக்கள் போராட்டமாக இது நடைபெற வேண்டும் என்பதற்காகவே இவ்வாறு கூறுகிறோம். எமது போராளிகள் மக்களுக்காகப் போராடும்



படிப்பகம்

www.padippakam.com

முன்னோடிகளாக இருத்தல் வேண்டும். சென்ற 30 ஆண்டுகளாக நடைபெற்ற அரசியல் பின்னடைவைப் பார்க்கும்போது ஒரு நீண்டகாலப் போராட்டமே நாட்டுப்பற்றையும் சோசலிசச் சிந்தனையையும் வளர்க்கக்கூடியது என நாம் நம்புகிறோம்.

பரந்துபட்ட மக்களின் ஆயுதம் ஏந்திய புரட்சிகரப் போராட்டத்தின் மூலமே தமிழீழத்திலுள்ள சிறீலங்கா ஆட்சியைத் தூக்கி எறிய முடியும். அதன் மூலமே மக்கள் ஆதரவு பெற்ற சனநாயகத்தை நிறுவி, சனநாயக சுதந்திரத்திற்கும் வழியமைக்கும் சகல வளங்களையும் சோசலிசத்தையும் நோக்கிய பயணத்தில் புரட்சிகர சக்திகளை ஒன்றிணைப்பதற்கு இவ் வமைப்பே வாய்ப்பானதாகும்.

தமிழீழத்தைச் சார்ந்த வழமையான அரசியல் கட்சிகள் உடனடித் தேவைகளை மையப்படுத்தி தற்காப்பு நடவடிக்கைகளையே கையாண்டன. தமிழீழத்தில் மட்டுமன்று, உலகில் எந்த நாட்டிலும் பரந்துபட்ட மக்கள் திடீரெனப் புரட்சியாளர்களாக மாறிவிடுவதில்லை. ஆனால், அவர்களது புரட்சிகர உணர்வைத் தட்டி எழுப்புவதற்குரிய தலைமை ஏற்படுத்த வேண்டும். பயங்கரவாதத்தில் ஈடுபடும் பிற்போக்கான 'நரோதினிட்டுகளாலோ' (Narodniks) பல காலமாகப் பிற்போக்கான கொள்கைகளைக் கொண்ட அரசியல் கட்சிகளாலோ நீண்டகாலப் போராட்டத்திற்கு வேண்டிப் பரந்துபட்ட மக்களை அணிதிரட்ட முடியாது.



படிப்பகம்

www.padippakam.com
தொழிலாளர், விவசாயிகள் மட்டுமே இறுதிவரை போராட வல்லவர். அவர்களது படையால் மட்டுமே வெற்றிகாண முடியும். இம்முடிவு கருத்துருவ ரீதியில் அமைந்ததுமட்டுமன்று; நடைமுறையிலும் காணக்கூடிய தாகும். யதார்த்தவாதிகளாலேயே சரியான அத்தியாவசியமான புரட்சியை நடத்த முடியும். தொழிலாளர், விவசாயிகளே எமது புரட்சியின் முன்னோடிகள் என நாம் கூறும்போது எமது சமூகத்தின் சமூக அமைப்பையும் தேசிய விடுதலை உணர்வின் சக்தியையும் நாம் மறந்துவிடவில்லை. நாம் தமிழீழ மக்களைப் பரந்துபட்ட தொழிலாளர்களின் தலைமையின் கீழேயே ஐக்கியப்படுத்த முனைகிறோம். இப் போராட்டத்தில் சிந்தனையாளர்கள், சிறுமுதலாளிகள் உட்பட தேசிய உணர்வுகொண்ட அனைவருக்கும் பங்குண்டு.

## சர்வதேச உறவுகள்

தனியாக நின்று தமிழீழ மக்களின் சுதந்திரத்தை வென்றெடுக்க முடியும் என்ற பொய்மைக் கருத்தை நாம் நிராகரிக்கிறோம்; சிறீலங்காவிலுள்ள முரண்பாடுகளே எமது போராட்டத்தை இறுதியாகத் தீர்மானிக்கும் என்பதே எமது கருத்தாகும். ஆகவே, அரசு யந்திரத்திற்கு எதிரான சிங்களப் பரந்துபட்ட மக்களின் போராட்டத்தையும் நாம் ஆதரிக்கிறோம். சிறீலங்காவின் உள்நாட்டு அரசியலில் தலையிடுவது எம் நோக்கமன்று. ஆயினும் எமக்கும் பரந்துபட்ட சிங்கள மக்களுக்கும் சோசலிசம் எனப் பாராளுமன்றப் பாதையைக் கடைப்பிடித்த இடதுசாரிகள் தோல்வியையே தந்தனர். சிங்களத் தொழிலாளர்களைப் பாதுகாக்காது இடதுசாரி



படிப்பகம்

www.padippakam.com
கள் அவர்களுக்கும் துரோகமே இழைத்தனர். ஆகவே, பாராளுமன்றத்திற்குப் புறம்பான புரட்சிகரப் போராளிகள் பலம் பெறும்போது ஆயுதப் போராட்டத்தில் அவர்களுக்கும் உதவுவோம். சுதந்திர சோசலிசம் தமிழ் ஈழத்திற்கு அருகே புரட்சிகர அரசு சிறிலங்காவில் அமைவது வரவேற்கத் தக்கதே.

விரைவில் தமிழீழத்தை வென்றெடுப்போம். அத்துடன் உலக ஏகாதிபத்தியங்களுக்கு எதிரான பாட்டாளியின் புரட்சியை வெடிக்கச் செய்வோம். ஏகாதிபத்தியத்தை நாம் நேரடியாக எதிர்த்துப் போராடுவோம். ஏனெனில் இலங்கை சர்வதேச ஏகபோக முதலாளித்துவத்துடன் கட்டுப்பட்டிருக்கிறது. ஏகாதிபத்தியங்கள் பிற்போக்கான சிறீலங்கா அரசுக்குக் கோடிக்கணக்கான டாலர் பணம் கொடுத்து அரசியல், கருத்துருவ ஆதரவும் வழங்கிவருகிறது. ஆகவே, நாம் ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளான உலக சோசலிச நாடுகளுடனும் தேசிய விடுதலை இயக்கங்களுடனும் முதலாளித்துவ நாடுகளிலுள்ள சனநாயக, தொழிலாளர் கட்சிகளுடனும் ஏகாதிபத்திய எதிர்ப்பு நாடுகளுடனும் நேச உறவை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

## ஐக்கியம்பற்றி

தமிழீழத்திலுள்ள முற்போக்கான, சனநாயக சக்திகளுடன் நாம் ஐக்கியப்படத் தயாராக உள்ளோம். இவ் ஐக்கியம் நாம் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த அடிப்படைத் திட்டத்துடனுவது இருத்தல் வேண்டும். எல்லோரும் ஐக்கிய முன்னணியின் போர்த்



படிப்பகம்

www.padippakam.com
தந்திரங்களை நன்கு புரிந்திருக்க வேண்டும். அத்தகைய ஐக்கிய முன்னணியின் அடிப்படைகளுள் ஒன்று ஐக்கியம்-போராட்டம்-ஐக்கியம் என்ற கொள்கையுடன் இருத்தல் வேண்டும். பொதுக் கொள்கைத் திட்டத்துடன் நாம் ஒன்றுபடுவோம். இணங்காத போர்த் தந்திர வழிகளைப்பற்றிக் கருத்துருவ ரீதியில் நாம் விவாதிக்கலாம். ஆனல், இறுதியில் பொதுத் திட்டத்தில் நாம் ஐக்கியப் படுவோம். ஐக்கியம்-போராட்டம்-ஐக்கியம் என்பதைப் பற்றி நாம் இவ்வாறே கருதுகிறோம்.

ஐக்கிய முன்னணியின்கீழ் எல்லாத் தேசிய சக்திகளையும் ஒன்றிணைக்கும்போது, இம் முன்னணியுள் தேசியம் பேசிக்கொண்டே செயலில் பாசிஸ்டுகளாகவும் முதலாளித்துவம் சார்ந்தவராகவும் இருப்பவர்கள் பற்றி நாம் விழிப்பாயிருக்க வேண்டும். இவ் ஐக்கிய முன்னணியுள் இத்தகைய ஆபத்தான துரோகிகள் நுழைவதை ஒரு போதும் அனுமதியோம்.

சென்ற ஐந்து ஆறு ஆண்டுகளில் எமது கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் செயலாற்றலில் மூன்று முனைகளில் நாம் பணியாற்றியுள்ளோம்.

1. சமூகத் துறையில் தமிழ் அகதிகள் புனர்வாழ்வு அமைப்புடனும் காந்தியத்துடனும் இணைந்து மலைநாட்டுத் தமிழ் மக்களைத் தமிழ்ப் பகுதிகளில் குடியேற்றுதல் - வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்புப் பகுதிகளில் நவீனமுறைப் பண்ணைகளை அமைத்தல் - மட்டக்களப்பில் புயல் நிவாரண வேலைகள் புரிதல் ஆகியவற்றில் உழைத்துள்ளோம்.



படிப்பகம்

www.padippakam.com

2. அரசியல் துறையில் தமிழ்ப் பகுதி பூராவும் கிளை களை அமைந்து விவசாயி, தொழிலாளி மட்டத்தில் அரசியல் உணர்வை வளர்த்து வந்துள்ளோம்.

3. இராணுவத்துறையில் பல கொரில்லாப் போராட் டங்களை வெற்றிகரமாக நடாத்தியுள்ளோம். ஆனைக் கோட்டைக் காவல் நிலையம் தாக்குதல், கிளிநொச்சி வங்கி, குறிகட்டுவானில் இராணுவத்தினரைத் தாக்கு தல், மட்டக்களப்புச் சிறையில் இருந்த போராளிகளை மீட்டல் ஆகியவற்றைச் சாதித்துள்ளோம். அத்துடன் தமிழீழத்திற்கு வேண்டிய இராணுவத்திற்குப் பயிற்சி அளித்துச் சிறீலங்காவின் சிங்கள இராணுவத் துடன் நேரடிப் போருக்குத் தயார்செய்து கொண் டிருக்கிறோம். வெகு விரைவில் தமிழீழ மக்களை விடுதலைபெற்ற ஓர் இனமாகக் காண வேண்டிய ஆயத்தங்களைச் செய்துகொண்டிருக்கிறோம்.



படிப்பகம்

www.padippakam.com

# தமிழீழ விடுதலைக்குத் தம் உயிர் ஈந்த கழக மெழுகுவத்திகள்!



கிருஷ்ணசாமி
கிருஷ்ணகுமார்



சதாசிவம்
சிவசண்முக மூர்த்தி



[illegible]தேவி

படிப்பகம்

www.padippakam.com



## டாக்டர் சோ. இராசசுந்தரம்

காந்திய இயக்கப் பொதுச் செயலாளர்

அகதிகளாக்கப்பட்ட மலையகத் தோட்டத் தொழிலாளர்களை தமிழீழத்தில் குடியமர்த்தி, தாயகத்தை பாதுகாத்து தலையாயப் பணியைச் செய்தவர். 27 - 7 - 1983-ல் சிங்கள அரசினல் வெலிக்கடைச் சிறையில் படுகொலை செய்யப் பட்டவர்.

படிப்பகம்

www.padippakam.com

வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்புப் பிரிவு,
தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்

படிப்பகம்